**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 139/2019**

**PW 10**

| | | |
|---|---|---|
| Name | : | **மரு.நாகேந்திரகுமார்** |
| Father's/Husband's Name | : | **அர்சுனன்** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2025.

**Accused present.**

**முதல் விசாரணை -**

(1) நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலைத்துறையில் இணை பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2017 அன்று நான் அரசு வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசியராக பணிபுரிந்தபோது கண்ணமங்கலம் வட்ட காவல் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின்படி சந்தவாசல் காவல் நிலைய குற்ற எண். 472/2017 வழக்கில் இறந்துபோன சேகர் (30) என்பவரின் பிரேதத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்திரன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு அதே நாளில் காலை 11.45 மணியளவில் பிரேத கூராய்வு ஆரம்பித்தேன். கூராய்வின்போது உடல் முழுவதும் மரண விறைப்பு தன்மை காணப்பட்டது. அவரின் கை விரல் நகங்கள் நீலம் பூத்து காணப்பட்டன. அவரது உடலில் காணப்பட்ட இறப்பிற்கு முன் உண்டான காயங்கள் பின்வருமாறு.

2) சீரற்ற தையலிட்ட காயம் 5.4 செமீ நீளத்துடன் 4 தையல்களுடன் நெற்றியின் இடதுபுறம் காணப்பட்டது. தொடர்ந்து கூராய்வு செய்ததில் தலைத்தோலின் அடியில் கருஞ்சிவப்பு நிற இரத்தக்கட்டு கபாலத்தின் இடது முன் மற்றும் பின்பகுதிகளில் காணப்பட்டது. (சாட்சி பிரேத பரிசோதனை சான்றிதழில் இடதுக்கு பதில் வலது என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று கூறுகிறார்) அதன் அடியில் இருந்த கபாலத்தில் 9.5 செமீ நீளமுள்ள விரிசல் முறிவு காணப்பட்டது. கபாலத்தை திறந்து பார்க்கும்போது 2.5 செமீ தடிமன் உள்ள கருஞ்சிவப்பு நிற Subdural இரத்தக்கட்டு இடது பெருமூளையின் மேற்புறம் முழுவதும் காணப்பட்டது. மெல்லிய பரவிய Subarachnoid இரத்தக்கசிவு மூளையின் மேற்பரப்பு முழுவதும் காணப்பட்டது. மூளை வீங்கியிருந்தது. மூளையை பிளந்து பார்க்கும்போது நடுமூளை எனப்படும் மூளை தண்டின் ஒரு பகுதியில் 1.5x1.1 x 0.8 செமீ அளவுள்ள இரத்தக்கசிவு காணப்பட்டது. இடது கண்ணை சுற்றி கருஞ்சிவப்பு நிற கன்றிய காயம் காணப்பட்டது.

(3)விலா எலும்புகள் இயல்பாக இருந்தது. இருதயம் இயல்பான அளவிலும் அதன் அனைத்து அறைகளிலும் நீர்த்த மற்றும் உறைந்த இரத்தம் காணப்பட்டது. அதன் வால்வுகள் மற்றும் இரத்த நாளங்கள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் இயல்பான அளவிலும் இரத்தம் தோய்ந்தும் காணப்பட்டன. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் காலியாகவும் அதன் சளிப்படலம் இரத்தம் தோய்ந்தும் காணப்பட்டன. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. இரைப்பையில் சுமார் 300 கிராம் பாதி செரித்த அரிசி சாத பொருட்கள் எவ்வித குறிப்பிடத்தக்க வாடையும் இன்றி காணப்பட்டது. அதன் சளிப்படலம் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும் இரத்தம் தோய்ந்தும் காணப்பட்டன. குடல்களில் மலப்பொருட்கள் காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பெலும்பு மற்றும் முதுகெலும்புகள் இயல்பாக இருந்தன. **உடல் உள் உறுப்புகளின் இராசயன பரிசோதனை அறிக்கை பெறுவதற்காக நான் இறப்பிற்கான கருத்து தெரிவிக்காமல் நிறுத்தி வைத்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் அ.சா.ஆ.6.** பின்னர் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட நஞ்சியல் அறிக்கையில் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டது தெரிய வந்தது. **அந்த நஞ்சியல் அறிக்கை அ.சா.ஆ.7.** அதனை பெற்ற பின்னர் 06.02.2018 அன்று இறுதி கருத்து வழங்கினேன். அதில் இறந்த சேகர் என்பவர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என்றும், அவரது உடல் உள் உறுப்புகளின் இராசயன பரிசோதனையில் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டது என்றும், கருத்து தெரிவித்தேன். **அந்த இறுதி அறிக்கை அ.சா.ஆ.8**. மேற்படி நபர் பிரேத கூராய்விற்கு சுமார் 12 – 24 மணி நேரங்களுக்கு முன் இறந்திருக்கக்கூடும். உடல் உள் உறுப்புகளில் எத்தில் ஆல்கஹாலை தவிர எந்த நச்சு பொருட்களும் கண்டறியப்பட்டதாக தெரியவரவில்லை. ஒரு நபரை மரத்தடியால் தலையில் தாக்கினால் மேற்படி காயங்களும் அதனால் இறப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –

நான் பிரேத பரிசோதனை செய்த நபருக்கு தலையில் ஏற்பட்ட ஒரேயொரு காயம் தான் வெளிப்புறகாயம். நடு மண்டையிலும், பின் மண்டையிலும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் எங்கு யாரால் போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. தையல் போடப்பட்ட காயத்தை எவ்வாறு கிழிந்த காயம் என்று கூறுகிறேன் என்றால் தையலை நீக்கி பார்த்தபோது அந்த காயத்தின் விளிம்புகளை பார்த்து கிழிந்த காயம் என்று கூறுகிறேன். நான் தையலை நீக்கி பார்த்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் அளவுக்கு அதிகமான மது போதையில் ஒழுங்கற்ற கற்கள் மீது விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்று கேட்டால் வாய்ப்புகள் குறைவு. ஒரு உருண்டையான மரத்தடியால் தலையில் தாக்கினால் அந்த மரத்தடியின் அளவுக்கு ஏற்றவாறு வீக்கக்காயம் இருக்கும் என்றால் அவ்வாறு அறுதியிட்டு கூறமுடியாது. எனது பிரேத பரிசோதனை சான்றில் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதம் 19.05.2017 ல் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். (அது ஒரு தட்டச்சு பிழை என்று சாட்சி கூறுகிறார்).

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**

**Additional District Judge,**

**Tiruvannamalai.**